11.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மானியம்

திருத்தணியை அடுத்த கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சி, எல்லம்பள்ளியில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி கலந்துகொண்டார். அப்போது, அவர் பேசியதாவது:

விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் சேர்ந்து, உறுப்பினர் அடையாள அட்டையை பெற்று ஈமச்சடங்கு, விபத்து, கல்வி உதவித்தொகைகளை பெற்று பயனடைய வேண்டும்.

பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திருமண உதவித்தொகையாக ஆண்களுக்கு ரூ. 8,000, பெண்களுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் வாரிசுதாரர்கள் தொழில்நுட்பக் கல்வி, கலை, மருத்துவக் கல்வி பயில ரூ.1,250 முதல் ரூ. 6,750 வரை ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறித்து, பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறது.

மேலும், கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விபத்துகள், இயற்கை இடர்பாடுகளால் உயிரிழக்கும் கால்நடைகளுக்கு நிதி உதவி பெறலாம். 5 மாடுகள் வரை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கலாம். இதர பிரிவைச் சார்ந்த விவசாயிகள் ரூ.250 செலுத்தினால், அரசு தரப்பில் மானியமாக ரூ.250 வழங்கப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் ரூ.150 செலுத்தினால் அரசு மானியமாக ரூ.350 செலுத்தும் என்றார் ஆட்சியர். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.முகமது இக்பால், ஊராட்சி மன்றத் தலைவர் பானு சண்முகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிக்கு மானியம்

வாடிப்பட்டி பகுதியில் இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிக்கு மானியம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, வாடிப்பட்டி வேளாண்மைக் கோட்டம், வேளாண்மை உதவி இயக்குநர் முருகேசன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: வாடிப்பட்டி வேளாண்மைக் கோட்டத்தில் உள்ள விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் விரிவுபடுத்தப்பட்ட தொழில்நுட்பப்படி நாற்றங்கால் அமைப்பதற்கு 2-க்கு 1 அடி அளவுள்ள தட்டுகளில் கரம்பை மற்றும் தென்னை நார்கள் நிரப்ப வேண்டும். பின்னர், விதை நெல்லை அதில் பரப்பி தண்ணீர் தெளித்து, விதைநெல் முளையிட்ட பின்னர் 15 நாள் கழித்து நெல் நடவு இயந்திரம் மூலமாக 25-க்கு 25 செ.மீ. அளவு இடைவெளியில் நாற்று நடவு செய்யவேண்டும்.

அதன்பின்னர், 10 நாள் முதல் 40 நாள்கள் வரை இயந்திரம் மூலம் களை எடுத்து வழக்கம்போல் நெல்லுக்கு இடும் ரசாயன உரங்களை இடவேண்டும். இத்தகைய முறையை கடைபிடித்தால், ஏக்கருக்கு 3,500 கிலோ வரை மகசூல் கிடைக்கும். இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிக்கு, ஹெக்டேருக்கு ரூ. 5 ஆயிரம் அரசு மானியம் வழங்கப்படுகிறது என அதில் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க 203 சிறப்பு முகாம் நடத்தப்படும்: ஆட்சியர்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க 203 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக, மாவட்ட ஆட்சியர் டி.ஜி. வினய் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

2016-17 ஆம் ஆண்டுக்கான கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டத்தில் இலவச கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, முதல்கட்டமாக பாடியூர் ஊராட்சியில் உள்ள மோளப்பாடியூர் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. முகாமைத் தொடக்கி வைத்து, மாவட்ட ஆட்சியர் டாக்டர் டி.ஜி. வினய் பேசியதாவது:

சிறப்பு முகாமில், கால்நடைகளுக்கு தடுப்பூசி, சினைப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்கம், குடற்புழு நீக்கம், சுண்டுவாத அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆடுகளுக்கு தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம், கோழிகள், நாய்கள் மற்றும் அனைத்து செல்லப் பிராணிகளுக்கும் தடுப்பூசி மற்றும் சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இதேபோல், மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ள 202 இலவச கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமில், பொதுமக்கள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து பயன்பெறலாம் என்றார்.

ஒவ்வொரு முகாமிலும் சிறந்த கிடேரி கன்றுகளை வளர்த்த உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன. மோளப்பாடியூர் முகாமில், சிறப்பாக கன்றுகளை பராமரித்த 3 விவசாயிகளுக்கு ஆட்சியர் வினய் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார். மேலும், நாட்டுக்கோழி பண்ணை அமைப்பதற்கு, வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இருவருக்கு தலா ரூ.29,400-க்கான மானியத் தொகையையும் ஆட்சியர் வழங்கினார்.

இந்த மருத்துவ முகாமில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ஜெகதீசன், துணை இயக்குநர் அப்துல்காதர், வட்டாட்சியர் தசாவதாரம், வடமதுரை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ராஜசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆக.19இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் 19 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் ஆட்சியர் எஸ்.நடராஜன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

காலை 11.30 மணிக்கு நடைபெற உள்ள கூட்டத்தில் விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என என ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் திறப்பு

தூணக்கடவு அணையிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு புதன்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திருமூர்த்தி அணையின் மூலம் நான்கு மண்டலங்களில் உள்ள 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆகஸ்ட் மாத இறுதியில் இரண்டாம் மண்டலத்தில் 95 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கான பாசனத்துக்காக திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட பொதுப் பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். தற்போது, திருமூர்த்தி அணையில் 25 அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது.

இதனால், தூணக்கடவு அணையிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு புதன்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்தத் தண்ணீரை திருமூர்த்தி அணையில் தேக்கி வைத்து இரண்டாம் மண்டலப் பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்படும் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பெருந்துறையில் கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ரூ. 1 கோடியே 55 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு, பெருந்துறை சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் 5,842 மூட்டைகளில் 2,90,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.53. 75-க்கும், அதிகபட்சமாக ரூ.56.55-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.43.15-க்கும், அதிகபட்சமாக ரூ.53.55-க்கும் விற்பனையானது.

மொத்தம் ரூ.1 கோடியே 55 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்குப் பயிற்சி

ராசிபுரம் அருகே வெண்ணந்தூர் வட்டாரம், ஆலாம்பட்டி வருவாய்க் கிராமத்தில் பிரதம மந்திரி சஞ்சாய் யோஜன திட்டம் குறித்து நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வெண்ணந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கு. சுந்தரவடிவேலு வரவேற்றார். ஊராட்சி ஒன்றியக் குழுக் தலைவர் ப.தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார். "அட்மா' திட்டத் தலைவர் எஸ்.பி.தாமோதரன் பங்கேற்றுப் பேசினார். நாமக்கல் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை வேளாண்மை துணை இயக்குநர்(பொறுப்பு) செப்ந்தராஜன், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நீர் ஆகாரங்களின் பயன்கள், நீர்வடிப் பகுதி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்துப் பயிற்சியளித்தார்.

வேளாண்மை பொறியியல் துறை பொறியாளர் சங்கர் குமார் மானியங்கள் குறித்துப் பேசினார். வேளாண்மை அலுவலர் செப்ந்தராஜன், துணை வேளாண்மை அலுவலர் வ.பழனிசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மேகலா, கருப்புசாமி, அந்தோணிசாமி, ஆரோக்கியசாமி, திருநாவுக்கரசு ஆகியோர் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

விவசாயிகள் சுந்தரம், பெரியதம்பி ஆகியோர் தங்கள் பகுதியில் நீர்மேலாண்மை மேற்கொண்டதை விளக்கினர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன. வெண்ணந்தூர் வட்டார "அட்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர், மா.ரமேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் மா.பார்த்திபன் "அட்மா' திட்டப் பணிகள், திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கினார். இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 4,079 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி ஆறு மற்றும் அதன் துணை நதிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனால் கடந்த இரு நாள்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 3,268 கன அடியாக இருந்தது. இது புதன்கிழமை காலை நொடிக்கு 4,079 கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் லேசான மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக மேட்டூர் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாயில் நொடிக்கு 500 கன அடி வீதமும், குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 61.92 அடியாகவும், அணையின் நீர்இருப்பு 26.13 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

## 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு: வேளாண் இணை இயக்குநர் தகவல்

மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் புதன்கிழமை தெரிவித்தார்.

திண்டிவனத்தை அடுத்த கட்டளை கிராமத்தில் இயந்திர நெல் சாகுபடி திட்டத்தை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராமலிங்கம் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியது: தமிழகத்தில் நடப்பாண்டு 147 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக அரசு வேளாண் துறை எடுத்து வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரித்திட அதிக மகசூல் தரும் புதிய ரகங்களுக்கு கிலோவுக்கு ரூ. 10 மானியம், பசுந்தாள் உர சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 1500 மானியம், வரப்பில் உளுந்து சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ. 100 மானியத்தில் உளுந்து விதைகள், மானிய விலையில் இயந்திரக் கருவிகள் உள்ளிட்டவை தேசிய வேளாண் திட்டத்தில் வழங்கப்படுகிறது.

அதன் ஒரு பகுதியாக இயந்திர நெல் சாகுபடி திட்டத்தை அரசு வேளாண் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

மாவட்டத்தில் சுமார் 4 லட்சம் ஏக்கரில் சொர்ணவாரி, சம்பா மற்றும் நவரை பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்யத் திட்டமிட்டப்பட்டு அனைத்து வட்டாரங்களிலும் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இயந்திர நெல் சாகுபடி திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் அரசு மாணியம் வழங்குகிறது. மாவட்ட விவசாயிகள் இதனைப் பயன்படுத்தி, தானிய உற்பத்தியை அதிகரித்திட வேண்டும் என்றார்.

வேளாண் துறை அலுவலர்கள் சுப்பிரமணியன், செந்தில்குமார், சந்துரு, வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் ஆகியோர் விவசாயத் தொழில்நுட்ப சம்பந்தமாக விளக்கமளித்தனர். கட்டளை, குருவம்மாபேட்டை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தீவனம் விலையேற்றம் எதிரொலி: நாட்டுக்கோழி குஞ்சு உற்பத்தி குறைப்பு

ஈரோடு: தீவன விலையேற்றம் காரணமாக, நாட்டுக்கோழி குஞ்சு உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு, சின்னியம்பாளையத்தை சேர்ந்த, நாட்டுக் கோழிப்பண்ணை உற்பத்தியாளர் பாலமுருகன் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், நாட்டுக் கோழிகுஞ்சு உற்பத்தி செய்ய, பெரிய அளவில் நான்கு, பண்ணைகளும், சிறிய அளவில், நூற்றுக்கும் மேற்பட்ட பண்ணைகளும் உள்ளன. பெரிய பண்ணைகளில், ஒரு வாரத்துக்கு, 8,000 முதல், 10 ஆயிரம் குஞ்சுகள் வரை உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மதுரை, திருச்சி, தர்மபுரி, மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த சிறு பண்ணையாளர்கள் கொள்முதல் செய்கின்றனர். நாட்டு கோழி உற்பத்தியாளர்களுக்கு சங்கம் எதுவும் இல்லை, இதனால், எங்கும் நிலையான விலை நிர்ணயம் கிடையாது. நாட்டுக் கோழியை பொறுத்தவரை, உற்பத்தியாளர்களை விட, விற்பனையாளர்களுக்கு தான் லாபம் அதிகம். குறிப்பாக, பண்ணைகளில், கிலோ, 160, 175, என, கொள்முதல் செய்யும் விற்பனையாளர்கள், கறியாக, 320, முதல், 350 ரூபாய் வரை, விற்பனை செய்கின்றனர். 90 நாள் தீவனம் கொடுத்து வளர்த்த உற்பத்தியாளர்களுக்கு, அந்தளவுக்கு, லாபம் கிடைப்பதில்லை. அதன் காரணமாக பலர், கோழி வளர்ப்பை குறைத்துக் கொண்டு, பொறித்த குஞ்சுகளை, விற்பனை செய்கின்றனர். தற்போது தீவன விலையேற்றத்தின் காரணமாக, உற்பத்தியை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 600 ரூபாயாக இருந்த, ஒரு மூட்டைத் தீவனம், படிப்படியாக உயர்ந்து, 1,850 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது. கடந்த மார்ச், ஏப், மே, மாதங்களில், 20 ரூபாய்க்கு விற்ற, ஒரு கோழிக்குஞ்சு நேற்றைய நிலவரப்படி, 36 ரூபாயாக

உயர்ந்துவிட்டது. தீவன விலை உயர்வு காரணமாகவும், வியாபாரிகளின் வருகை குறைவு காரணமாகவும், வாரம் 8,000 என, இருந்த உற்பத்தி, 6,000மாக, குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆடிப்பட்டம் நிலக்கடலை சாகுபடி: களையெடுக்கும் பணி தீவிரம்

பெருந்துறை: பெருந்துறை பகுதிகளில், நிலக்கடலை பயிரில் களையெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. சித்திரை, ஆடி மற்றும் மார்கழி பட்டத்தில், மானாவாரி நிலத்தில் நிலக்கடலை சாகுபடி நடைபெறும். பெருந்துறை சுற்றுவட்டாரப் பகுதிகளில், ஆடிப்பட்டத்தில் விதைக்கப்பட்டுள்ள நிலக்கடை பயிரில் தற்போது, களையெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: நிலக்கடலை செடிகள் நன்கு முளைவிட்டிருந்தாலும், மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றன. இன்னும் இரண்டு மழை நன்றாக பெய்தால் மட்டுமே செடிகளை காப்பாற்ற முடியும். மயில் தொந்தரவு அதிகம் இருந்தாலும், இந்தமுறை நிலக்கடலை சாகுபடி அதிகம் நடைபெற்றுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

செங்குறை செங்குறை அருகே பெரிய அரவங்குறிச்சியில் விவசாயிகளுக்கான பயிர் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது. நக்கம் உகவி வேளாண்மை இயக்குனர் சசிகலா தலைமை வகித்தார். சிரங்காட்டுப்பட்டி ஊராட்சித் தலைவர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார்.

இதில் தட்டைப்பயிர், உளுந்து, கொள்ளு, நிலக்கடலை உள்ளிட்ட பயறு வகை சாகுபடிக்கு காரிப் முன்பருவம், நவீன தொழில் நுட்பம், நுண்ணுயிர் உரம், டி.ஏ.பி.,2 சத கரைசல் குறித்து விளக்கப்பட்டது. துணை அலுவலர் நடனராஜ், உதவி அலுவலர் வீரராஜ், அட்மா அலுவலர்கள் ராஜ்குமார், குமரேசன் மற்றும் சுற்றுப்புறத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண் கருவிகளுக்கு மானியம்

திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது என இணை இயக்குனர் தங்கசாமி தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது: விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக அரசு சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இந்நிலையில் விவசாயத்திற்கு பயன்படுத்தும் வேளாண் கருவிகளான பவர் டில்லருக்கு ரூ.75 ஆயிரம், ரோட்டாவேட்டருக்கு ரூ.35 ஆயிரம், பம்புகளுக்கு ரூ.10 ஆயிரம், ஸ்பிரிங்கிளருக்கு ரூ.10 ஆயிரம், நீர் கடத்தும் குழாய்களுக்கு ரூ.10 ஆயிரம், டிராக்டருக்கு ரூ.1.25 லட்சமும், விதைச் சான்று பெற்ற விதை நெல்லுக்கு ரூ.10 மானியமாக வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் 230 டன் விதை நெல் உள்ளன. வேளாண் கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் அலுவலர் அலுவலகத்தில் சென்று விண்ணப்பிக்கலாம், என்றார்.

## தமிழகத்தில் பூண்டுக்கு அதிகவிலை: மகிழ்ச்சியில் விவசாயிகள்

மூணாறு, வட்டவடை ஊராட்சியில் உற்பத்தி செய்யப்படும் பூண்டுக்கு தமிழகத்தில் அதிக விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மூணாறு அருகில் உள்ள வட்டவடை ஊராட்சியில் 46 ஆயிரம் ஏக்கரில் காய்கறி சாகுபடி நடக்கிறது. இங்கு பிற காய்கறிகளைக் காட்டிலும் நூறு நாள் பயிரான பூண்டு சாகுபடியில் ஏராளமானோர் ஈடுபட்டு வந்தனர். குறிப்பாக மலைவாழ் மக்கள் வசிக்கும் கூடலார்குடி, வல்சபட்டிகுடி, மேல்வலசபட்டிகுடி, சாமியார்விளைகுடி மற்றும் கொட்டக்கொம்பூர்,சிலந்தியாறு, பழத்தோட்டம், வட்டவடை ஆகிய பகுதிகளில் பூண்டு அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் பூண்டு மிகுந்த காரத்தன்மை கொண்டது என்பதால், இதற்கு கடும் 'கிராக்கி' நிலவும். ஆனால் கடந்தாண்டு பூண்டுக்கு போதிய விலை கிடைக்கவில்லை.கிலோ ரூ.50 முதல் 100 வரை விலை போனதால், ஏராளமான விவசாயிகள் பூண்டு சாகுபடியை கைவிட்டு வேறு விவசாயத்தில் கவனம் செலுத்தினர். இதனால் இந்தாண்டு பூண்டு உற்பத்தி வெகுவாக குறைந்தது. இதனால் தற்போது பூண்டுக்கு அதிக விலை கிடைக்கின்றது. உள்ளூரில்

வழக்கம்போல் கடந்தாண்டு விலைக்கே கொள்முதல் செய்யப்படும் நிலையில், தமிழகத்தில் கிலோ ரூ.250 முதல் 300 வரை விலை கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். எனவே இங்கிருந்து மேட்டுப்பாளையம், மதுரை,வடுகபட்டி ஆகிய பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கின்றனர். அதிக விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் தயார்**

மகுடஞ்சாவடி: மகுடஞ்சாவடி அருகே, வனவிரிவாக்க மையத்தில், குறு மற்றும் பெரு விவசாயிகளுக்கு, இலவச மரக்கன்றுகள் தயார்நிலையில் உள்ளன.

இதுகுறித்து வன விரிவாக்க அலுவலர் ஆனந்தன் கூறியதாவது: இளம்பிள்ளை அருகே, சித்தர்கோவிலில், 12.5 ஏக்கர் பரப்பளவில் வன விரிவாக்க மையம் செயல்படுகிறது. அங்கு, ஆண்டுதோறும் விவசாயிகளுக்காக, ஆயிரக்கணக்கில் இலவச மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, வினியோகிக்கப்படுகின்றன. தற்போது, மழை காலம் துவங்க உள்ளதால், பல வகை மரக்கன்றுகள் தயார்நிலையில் உள்ளன. குறிப்பாக, மலை வேம்பு - 15 ஆயிரம் நாற்றுகள், தேக்கு - 30 ஆயிரம், நாட்டு வேம்பு - 20 ஆயிரம், பிய்யன் - 15 ஆயிரம் என, 80 ஆயிரம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்க, தயாராக உள்ளன. அதில், 2.5 ஏக்கர் வரை உள்ள குறு விவசாயிகளுக்கு, 500 மரக்கன்றுகள், 12.5 ஏக்கர் வரை உள்ள, பெரு விவசாயிகளுக்கு, 2,500 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள், தங்கள் நில பட்டா, சிட்டா, பேங்க் பாஸ்புக், ஒரு அடையாள அட்டை போன்றவற்றின் நகலை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். பின், அந்த நிலத்தை அதிகாரிகள் பார்வையிட்டு, நிலத்திற்கு பொருத்தமான மரக்கன்றுகளை வழங்குவர். கன்றுகள் நட்டு, மூன்று ஆண்டுகளுக்கு பின், அதிகாரிகள் மரத்தை பார்வையிட்டு, எண்ணிக்கைக்கேற்ப ஊக்கத்தொகை வழங்குவர். மேலும், அலுவலகம் மூலம் மகுடஞ்சாவடி ஒன்றிய பகுதி விவசாயிகள் மற்றும் சங்ககிரி தாலுகா, கோனேரிபட்டி, அக்ரஹாரம், மோரூர் மேற்கு, மொத்தையனூர் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு, மரக்கன்றுகள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு, 0427 - 2410474 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## பயறு வகை பயிர்கள் விழிப்புணர்வு முகாம்

ராமநாதபுரம், : முதுகுளத்துார் வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில் பயறு வகை பயிர்கள் உற்பத்தி, சந்தைப்படுத்தல் குறித்த விழிப்புணர்வு முகாம் புதுப்பட்டணத்தில் நடந்தது. கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) வெள்ளைச்சாமி தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் அம்பேத்குமார், உதவி இயக்குனர் தியாகராஜன் பேசினர். பயறுகளின் விதை நேர்த்தி, உற்பத்தி மற்றும் வருமானம் பெருக்க தொழில்நுட்பங்கள், உற்பத்தி பெருக்கத்திற்கு அதிக விதை பண்ணைகள் அமைக்க வேண்டும் என, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## நீர் மேலாண் பயிற்சி

முதுகுளத்துார், :பிரதமர் வேளாண் நீர் பாசன திட்டத்தின் கீழ் முதுகுளத்துார் வட்டார வேளாண் துறை சார்பில் நீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மை பயிற்சி சாம்பக்குளத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர்(பொறுப்பு) தியாகராஜன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் சேதுராமன் முன்னிலை வகித்தார். மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சமூகவியலர் திருக்கண்ணன், இன்ஜினியர் புகழேந்தி பேசினர். பண்ணை குட்டைகளில் மழைநீரை சேகரித்து நுண்ணீர் பாசனம் மூலம் விவசாய பொருட்களின் உற்பத்தியை பெருக்க வேண்டும்என, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி

மல்லசமுத்திரம்: மல்லசமுத்திரம் ஒன்றியம், மின்னாம்பள்ளி கிராமத்தில் அம்மா பண்ணை விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி அளிக்கபட்டது. நாமக்கல் வேளாண்மை துணை இயக்குனர், சுப்பையா தலைமை வகித்தார். பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்பாடுகள் குறித்து, கால்நடை, பட்டு வளர்ச்சி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை அலுவலர்கள் விரிவாக பேசினர். உதவி வேளாண் அலுவலர்கள் செந்தில் குமார், அலாவுதீன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வெல்லம் விலை சரிவு

ப.வேலூர்: ப..வேலூரில் நேற்று நடந்த ஏலத்தில், வெல்லத்தின் விலை சரிந்தது. ப.வேலூர் அடுத்த, கபிலர்மலை ஒன்றிய பகுதிகளில், 100க்கும் மேற்பட்ட வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. ஆலைகளில் உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை தயார் செய்யப்படுகிறது. பிலிக்கல்பாளையத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்படும், விவசாயிகள் வெல்ல ஏல மண்டிக்கு, அங்குள்ள, 13 வெல்ல மண்டிகளிலும் ஏலம் விடப்படுகிறது. கடந்த வாரம், அச்சு வெல்லம், 30 கிலோ கொண்ட சிப்பம், 1,350 ரூபாய், உருண்டை வெல்லம், 1,400 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், அச்சு வெல்லம், 1,250 ரூபாய், உருண்டை வெல்லம், 1,350 ரூபாய்க்கும் ஏலம் போனது.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## பவானிசாகர் அணையில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் உத்தரவு

ஈரோடு: பவானிசாகர் அணையில் இருந்து நாளை முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இந்த நீர் திறப்பாள் 40247 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

## தேயிலை கவாத்து பணி துவக்கம்

வால்பாறை: வால்பாறை பகுதியில் அதிக அளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இளம் தேயிலை துளிர்கள் முலம் தயாரிக்கப்படும் தேயிலை சுவை அதிகமாக இருக்கும் என்பதாலும், தேயிலை செடிகள் குறிப்பிட்ட அளவிற்கு மேல் வளர்ந்தால் தேயிலை பறிக்க முடியாது என்ற காரணத்தாலும் தேயிலை செடிகளை குறிப்பிட்ட அளவு வெட்டி கவாத்து விடுவது வழக்கம். தென்மேற்கு பருவ மழையை எதிர்பார்த்து தேயிலை விவசாயிகள் தேயிலை செடிகளை வெட்டி

விட்டிருந்தனர். இந்நிலையில் பருவ மழை வழக்கமான அடைமழையாக பெய்யாமல் வெயில் மற்றும் சாரல் மழையாக உள்ளதால் பல எஸ்டேட்களில் மீண்டும் கவாத்து பணிகள் துவங்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவ மழை தொடரும் என்பதால் கவாத்து பணிகள் துவங்கியதாக தோட்ட அலுவலர்கள் கூறினர்.

## சிக்கல் வேளாண். அறிவியல் நிலையத்தில் பழம், காய்கறி பதப்படுத்தும் பயிற்சி விண்ணப்பிக்க 20ம் தேதி கடைசி

நாகை : சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பழங்கள், காய்கறிகள் பதப்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்கு விண்ணப்பிக்க வரும் 20ம் தேதி கடைசி நாளாகும். இதுபற்றி சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நாகை மாவட்டம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து தொழில்திறன் பயிற்சிகளை வழங்க உள்ளது.

இதில், கிராமப்புற இளைஞர்கள், வேளாண்மை சார்ந்த பயிற்சி பெற விரும்புவோர் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் சேர விரும்புபவர்கள் 6ம் வகுப்பு படித்திருக்க வேண்டும். தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 18 வயதுக்கு மேல் 40 வயது வரை உள்ளவர்கள் பயிற்சியில் சேர தகுதியானர்வர்கள். பயிற்சி 6 மாத காலம் வழங்கப்படும். வார விடுமுறை நாட்களில் மாதம் ஒரு நேர்முகத்தேர்வு நடைபெறும். பதிவு கட்டணமாக ரூ.50 செலுத்த வேண்டும்.

இப்பயிற்சியில், காளான் வளர்ப்பு, பழங்கள் மற்றும் காய்கறிகளை பதப்படுத்துதல், திடக்கழிவு மறுசுழற்சி, மண் புழு உரம் தயாரித்தல், தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள், பருத்தி சாகுபடி தொழில் நுட்பங்கள், அங்கக வேளாண்மை, நவீன பாசன முறை மேலாண்மை, தரிசு நில மேம்பாடு உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இந்த சான்றிதழை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காக பதிவு செய்து

கொள்ளலாம். சான்றிதழ் மூலம் அரசுடமை ஆக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்று தொழில் தொடங்கலாம்.

இந்த சான்றிதழை தொழில் தொடங்க ஒரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணமாக வைத்து கொள்ளலாம். இப்பயிற்சியில் சேர வருகிற 20ம் தேதி கடைசி நாள். மேலும் விவரங்களுக்கு 04365 246266 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ அல்லது சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளரை நேரில் சந்தித்தோ தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அனுராதா தெரிவித்துள்ளார்.

## ஊடு பயிராக பயிரிட சோளம் ஏற்றது வேளாண்துறை அறிவுரை

பழநி, : ஊடுபயிராகப் பயிரிடுவதற்கு சோளம் ஏற்ற பயிரென வேளாண்துறையினர்

தெரிவித்துள்ளனர். சோளம் பயிரிட கோ.எஸ் 28, கோ (எஸ்) 30, வீரிய ஒட்டுச்சோளம் கோ 5 ஆகியவை ஏற்ற ரகங்களாகும். பயிர் அறுவடைக்குப் பின் சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். இறவை நிலத்திற்கு ஹெக்டேருக்கு 10 கிலோவும், மானாவாரி நிலத்திற்கு ஹெக்டேருக்கு 15 கிலோ விதைகள் தேவைப்படும். 45*15 சென்டிமீட்டர் அல்லது 45*10 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதைகளை 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்ற அளவில் தண்ணீரில் 6 மணி நேரம் ஊற வைத்த பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 600 கிராம் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பு செய்த 3ம் நாளும், பின் 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம், நுண்சத்து, மக்கிய தென்னைநார் கழிவுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், சாம்பல் சத்து, தழை மற்றும் மணிச்சத்து போன்றவற்றை வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். விதைத்த 30 நாட்களில் களை எடுக்க வேண்டும்.

சோளம் தனிப்பயிராகப் பயிரிடும்போது அட்ரசின் என்ற களைக்கொல்லியைத் தெளிக்க வேண்டும். சோளத்தை ஊடுபயிராகப் பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தைப் பயன்படுத்த வேண்டும். குருத்து ஈ, தண்டு துளைப்பான், கதிர்நாவாய், செம்பேன், துரு நோய், தேன் ஒழுகல் நோய், கதிர் பூசாண நோய், அடிச்சாம்பல் நோய் போன்றவை ஏற்பட்டால் வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உரிய மருந்துகளை தெளிக்க வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆக.19ல் நடக்க உள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆக.19ம் தேதி காலை 11மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கெள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.